**தலைப்பு - 235 சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 235 - சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 28 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 25 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானமல்லாத பெறுவனவுகள்**

நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய வருமானமல்லாத பெறுவனவுகளுக்கான கணக்கீட்டின் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 52 இன் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் ரூபா 1,320,930 ஆக இருந்த போதிலும் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 973,738 ஆக நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டதன் காரணமாக அவை ரூபா 347,192 ஆல் குறைவாகக் காட்டப்பட்டுள்ளன. | திணைக்களம் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தாததால், அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் குறுக்கு குறிப்புக்களிலிருந்து (11) பெறப்பட்ட பெறுமதி அதாவது, ரூபா 973,738 நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளது. சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் 2024 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருவதால், எதிர்காலத்தில் அதன் பிரகாரம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 52 இன் பிரகாரம் முற்பண பெறுவனவுகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 52 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கின் வரவு மீதியின் அதிகபட்ச வரம்பின் உண்மையான பெறுமதி ரூபா 3,144,235 ஆக இருந்த போதிலும் அது கணக்கில் ரூபா 657,674 ஆல் குறைத்து ரூபா 2,486,561 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | தொடர்புடைய அவதானிப்புடன் இணங்கப்பட்டதுடன் தவறுதலாக குறுக்கு குறிப்புகளை கணக்கிற்கு எடுத்து கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்ததால் இந்த பிழை ஏற்பட்டுள்ளது. உரிய அவதானிப்பின் பிரகாரம் செயற்படுமாறு பொறுப்பதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 52 இன் பிரகாரம் வரவு மீதியின் அதிகபட்ச வரம்பின் உண்மையான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும். |

### (இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் வாகனத்தின் பெறுமதி ரூபா 7,000,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றின் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் வாகனத்தின் பெறுமதி ரூபா 12,310,000 ஆக இருந்ததால் அது நிலையான சொத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியை விட ரூபா 5,310,000 அதிகமாக காட்டப்பட்டிருந்ததுடன் ஒரு காரின் பெறுமதி நிலையான சொத்து பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்து ஆவணத்தில் வாகனங்களின் பெறுமதி ரூபா 7,000,000 ஆக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இந்த நிறுவனத்தில் உள்ள வாகனங்கள் வேறு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டு புதிய வாகனங்கள் நீதி அமைச்சிற்கு கிடைத்துள்ளதுடன், தற்போதுள்ள கார்கள் தொடர்பான காப்புறுதியில் கொடுக்கப்பட்ட வருடாந்த மதிப்பீடுகளின் பிரகாரம் இந்த பெறுமதி அதிகரித்துள்ளது. நிலையான சொத்து பதிவேட்டில் WP KP 1092 இலக்கத்தை கொண்ட காரை சேர்த்துக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிற்கு அறிவிக்கப்பட்டதென தெரிவிக்கப்பட்டது. | நிலையான சொத்து பதிவேட்டில் சரியான பெறுமதியை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | வாகனங்களின் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்கள் நிதிக்கூற்றின் நிதியல்லாத சொத்துக்களின் கூற்றில் ரூபா 1,900,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்ட போதிலும் | இந்த மதிப்பீடு உரிய கார்களின் முகவரால் தீர்மானிக்கப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்து பதிவேட்டில் தகுதிவாய்ந்த மதிப்பீட்டு நிறுவனத்தால் மதிப்பிடப்பட்ட |

| | | |
|---|---|---|
| வாகனங்கள் தகுதியான விலைமதிப்பீட்டு நிறுவனத்தால் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | பெறுமதியை பதிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**(ஈ) முற்பணக் கணக்கு மீதிகள்**

முற்பணக் கணக்குகளின் ஆண்டிறுதி மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 52 இன் பிரகாரம் முற்பண கொடுப்பனவு தொகை ரூபா 1,281,895 ஆக இருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் அத் தொகை ரூபா 1,629,087 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக ரூபா 347,192 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வாண்டில் அமுல்ப்படுத்தப்படாததால், நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் நிதிக்கூற்றில் குறுக்கு குறிப்புக்களிலிருந்தான (11) புள்ளிவிபரம் மாத்திரமே காட்டப்பட்டுள்ளது. சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் 2024 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருவதால் எதிர்காலத்தில் அதற்கிணங்க இது தொடரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 52 இன் பிரகாரம் முற்பண கொடுப்பனவுகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**(உ) கட்டுநிதி மீதி**

ஆரம்ப மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 51 இன் பிரகாரம் ஏனைய தலைப்புக்களின் முற்பண “பீ“ கணக்கிற்கான செலவுகள் ரூபா 1,320,930 ஆக இருந்த போதிலும் அது கட்டுநிதி கணக்கிணைக்க கூற்றிற்கு ரூபா 973,738 ஆக சேர்க்கப்பட்டதால் ரூபா 347,192 ஆல் குறைத்துக்காட்டப்பட்டது. | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வாண்டில் அமுல்ப்படுத்தப்படாததால், நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் நிதிக்கூற்றில் குறுக்கு குறிப்புக்களிலிருந்தான (11) புள்ளிவிபரம் மாத்திரமே காட்டப்பட்டுள்ளது. சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் 2024 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருவதால் எதிர்காலத்தில் அதற்கிணங்க இது தொடரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 51 இன் பிரகாரம் முற்பண “பீ“ கணக்கில் செலவுகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 51 இன் பிரகாரம் ஏனைய தலைப்புக்களின் முற்பண "பீ" கணக்கிற்கான வரவுகள் ரூபா 146,512 ஆக இருந்த போதிலும் அது ரூபா 493,704 ஆக கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் கழிக்கப்பட்டிருந்ததால் ரூபா 347,192 ஆல் குறைத்துக் காட்டப்பட்டது. | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வாண்டில் அமுல்ப்படுத்தப்படாததால், நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் நிதிக்கூற்றில் குறுக்கு குறிப்புக்களிலிருந்தான (11) புள்ளிவிபரம் மாத்திரமே காட்டப்பட்டுள்ளது. சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் 2024 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருவதால் எதிர்காலத்தில் அதற்கிணங்க இது தொடரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 51 இன் பிரகாரம் முற்பண "பீ" கணக்கிற்கான வரவுகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 15 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் 04 மூலதன செலவின விடயங்களுக்கும் ஒதுக்கப்பட்ட ரூபா 22,300,000 தொகையில் ரூபா 5,770,791 தொகை மீதம் இருந்தது. இது 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் இருந்தது. | பொதுச் செலவின முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தியாவசிய செலவினங்களுக்கு மாத்திரமே நிதியேற்பாடுகள் விடுவிக்கப்பட்டதாலும், சில அத்தியாவசிய செலவினங்கள் தேவைப்பட்ட போதிலும் அதற்கான நிதியேற்பாடுகள் எதுவும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் செய்யப்படாததாலும் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின விடயங்களில் உள்ள நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது. | தகுந்த கவனத்துடனும் சிக்கனமாகவும் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் செலவின விடயம் 1409 இற்கு ரூபா 600,000 தொகை மாற்றப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மாற்றப்பட்ட தொகை மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக சேமிக்கப்பட்டதுடன் அந்த செலவின விடயங்களின் | இந்தச் செலவின விடயமானது பாதுகாப்புச் செலவினங்கள், துப்பரவாக்கல் செலவினங்கள் மற்றும் ஏனைய ஏதேனும் செலவின விடயத்திற்கு உட்படாத அனைத்துச் செலவினங்களையும் உள்ளடக்கியதுடன் ரூபா 600,000 தொகை மாற்றப்பட்ட போதிலும் நிதியேற்பாடுகளில் பற்றாக்குறை | தேவையை சரியாகக் கண்டறிந்து, நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நிதியேற்பாடுகளை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| நிதியேற்பாடுகளின் மொத்த மீதி ரூபா 653,430 ஆக இருந்தது. | இருக்கக்கூடும் என எதிர்வுகூறப்பட்டதுடன் அத்தகைய செலவினம் ஏற்படாததால் இந்தத் தொகை சேமிக்கப்பட்டதென தெரிவிக்கப்பட்டது. | எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2 (அ) பிரிவின் பிரகாரம் தனிநபர் சம்பளம் மற்றும் படிகள் தவிர்ந்த கொடுப்பனவுகளுக்கான பொறுப்புக்கள் வருடாந்த பாதீட்டு எல்லைக்குள் இனங்காணப்பட வேண்டிய போதிலும் மேலதிக நேரம் மற்றும் பிரயாணக் கொடுப்பனவுகளான ரூபா 17,899 தொகை நிதிக்கூற்றுக்களுக்கான பின்னிணைப்பு (iii) இல் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் சேர்க்கப்பட்டுள்ளது. | இத்திணைக்களம் நீண்டகாலமாக கடைப்பிடித்து வரும் நடைமுறையின் பிரகாரம் மேலதிக நேரம் மற்றும் பிரயாண கொடுப்பனவுகள் தொடர்ந்துவரும் ஆண்டின் சனவரி மாதம் செலுத்தப்படுவதால் இது கடப்பாடு மற்றும் பொறுப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | மேலதிக நேர மற்றும் பிரயாணக் கொடுப்பனவுகள் பொறுப்புகளாக இனங்காணப்படக்கூடாது. |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்பு பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | | | |
| | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு 2008 சனவரி | 771,817 | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளிற்கு ரூபா 25 முத்திரைத் தீர்வை அறவிடப்பட வேண்டிய போதிலும் 10 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 771,817 கொடுப்பனவிற்காக முத்திரைத் தீர்வை | இது தொடர்பில் சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிற்கு அறிவிக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் உரிய கொடுப்பனவுகளுக்காக முத்திரைத் தீர்வையை முறையாக | குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரகாரம் தொடர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 01 ஆம் திகதிய 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | | அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | | |
| | 371(2)(அ) | - | சிறுசெலவுக் காசு உப கட்டுநிதியிலிருந்து ஒரு சந்தர்ப்பத்தில் தேவைக்கு செலுத்தப்படக்கூடிய அதிகபட்ச வரம்பு ரூபா 5,000 இறகு மேற்படாமல் இருக்க வேண்டிய போதிலும் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 5,000 செலவிடப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு சந்தர்ப்பத்தில் தேவைக்கான ரூபா 5,000 அதிகபட்ச வரம்பை பேணுவதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்ட நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தொடர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | | | | |
| | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | 187,235 | 02 சந்தர்ப்பங்களில் ரூபா 187,235 மொத்த கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்ப்புகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் தகுதிவாய்ந்த இயந்திர பொறியியலாளர் ஒருவரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் கார் பழுதுபார்ப்புக்களில் நம்பகத்தன்மை மற்றும் சிறந்த தரமான சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போதுள்ள ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படும் விலைகள் மிக அதிகமாக காணப்படவில்லை என்றும் முடிந்தவரை முகவர் மற்றும் அரசாங்க இயந்திரப் பொறியியலாளரிற்கு குறிப்பிடப்பட்டு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | - உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அனைத்து சாரதிகளும் பின்னிணைப்பு 01 ஆக அறிமுகப்படுத்தப்பட்ட படிவத்தை பேண வேண்டிய போதிலும் இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களுக்கும் ஒரு மாதாந்த நாளாந்த அட்டவணை மாத்திரமே பேணப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில் பொறுப்பான உத்தியோகத்தரின் சான்றிதழ் இல்லாமல் 3553 கிமீ ஓட்டப்பட்டுள்ளது. | குழாம் வாகனங்களின் ஓட்ட அட்டவணைகளை சாரதிகள் முறையாக பேணி வருகின்றதுடன் குறிப்பிட்ட மாதங்களில் எத்தனை கிலோமீற்றர்கள் ஓட்டப்பட்டன என்பது தவறுதலாக மேலதிக நேர படி விண்ணப்பப் படிவத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் அந்த குறிப்புக்களைப் பயன்படுத்துமாறு சாரதிகளுக்கு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த நாளாந்த அட்டவணைகளை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) அரச கணக்குகள் சுற்றறிக்கைகள் | | | |
| 2023 நவம்பர் 11 ஆம் திகதிய 03/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை | - அரச கணக்குகள் வழிகாட்டலின் படிவ இல. 01, 04 மற்றும் 3.11 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதுப்பிக்கப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டலின் பிரகாரம் எதிர்காலத்தில் அரசு அதிகாரிகளின் முற்பண பீ கணக்கை தயாரிப்பதற்கு சம்பந்தப்பட்ட பெறுப்புவாய்ந்த அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டலின் பிரகாரம் தொடர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூன்று சட்ட சீர்திருத்தங்கள் 2023 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2023 மே 19 இல் புதிய தலைவர் நியமிக்கப்பட்ட பின்னர் 2023 ஆம் ஆண்டில் சட்டச் சீர்திருத்தங்களைக் கருத்தில் கொள்ளுமாறு சட்ட ஆணைக்குழத் திணைக்களத்திற்கு நீதி அமைச்சு உத்தரவிட்எருந்ததால் 2022 திசெம்பரில் தயாரிக்கப்பட்ட 2023 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சீர்திருத்தம் சேர்க்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை அந்த ஆண்டு செயலநடவடிக்கைத் திட்டத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 06/2019 (i) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், இலங்கையின் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி சேவை வழங்குநர்களிடமிருந்து போட்டி விலைகளை கோருவதன் மூலம் அவர்களின் முகவர்கள்/ தரகர்கள் மூலம் பொதுக் காப்புறுதியைப் பெறக்கூடிய போதிலும் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்திற்குச் சொந்தமான 03 கார்கள், ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன் லிமிட்டட்டினால் ரூபா 174,802 கிரயத்தில் விலைகளை கோராமல் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன. | இந்த கார்கள் நீதி அமைச்சினால் 2018 இல் வழங்கப்பட்டதுடன் அந்த ஆண்டு முதல் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. திருப்திகரமான சேவை, அரசாங்கத்துடன் இணைந்த பகுதியளவு-அரச கம்பனி மற்றும் அதிக நம்பகத்தன்மை மற்றும் பொறுப்புடன் இருப்பதால் அதே கம்பனியிடமிருந்து இந்த சேவை பெறப்பட்டது, மேலும் ஏனைய கம்பனிகளிடமிருந்து விலை கோரப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு எரிபொருள் சோதனைக்குப் பின்னர் 12 மாதங்களுக்குப் பின்னர் அல்லது 25000 கிமீ தூரம் ஓடிய பின்னர் அல்லது இயந்திரம் தொடர்பான பெரிய பழுதுபார்ப்புகளுக்குப் பின்னர் இவற்றில் எது முதலில் இடம்பெற்றதோ அதன் பின்னர் மீண்டும் எரிபொருளை நிரப்பி பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த கம்பனியின் 03 வாகனங்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இயக்கப்பட்டதென வாகன லொக் புத்தகத்தின் பரீட்சிப்பின் போது எந்த தகவலும் வெளிப்படுத்தப்படாததுடன் கடைசியாக எரிபொருள் சோதனை 2018 இல் செய்யப்பட்டிருந்தது. | இந்தத் திணைக்களமானது ரூபா 25,000 சிறுசெலவுக் கட்டுநிதியில் எரிபொருள் ஒதுக்கத்தை கொண்டுள்ளதுடன் 4 குழாம் மோட்டார் கார்களைக் கொண்டுள்ளது. அதன் பிரகாரம் நாளாந்த குழாம் கடமைகளுக்கான எரிபொருள் விநியோகத்தின் போது ITMIS முறைமையின் மூலம் எரிபொருளுக்கான பணம் பெறப்படுவதால், எரிபொருள் எரிப்பு சோதனை நடாத்தும்போது கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறையின் பிரகாரம் செயற்படுவதில் நடைமுறையில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைகளை வழங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் அல்லது அதிகார கையளிப்பின் கீழ் அதே பணிகள் ஒதுக்கப்பட்டவர்கள் அல்லது அரச கணக்கு தொடர்பான உறுதிச்சீட்டுக்களை சான்றுபடுத்தும், காசோலைகளில் கையெழுத்திடும் உத்தியோகத்தர்கள் நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரமும் அரசாங்க உத்தியோகத்தர் பிணை கட்டளை சட்டம் (Cap.612) மற்றும் 2011 சனவரி 18 ஆம் திகதிய 01/2011 ஆம் இலக்க நீதி அமைச்சின் சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரமும் பொதுப் பண வருமான முத்திரைகள் அல்லது பொருட்களைப் பெறுதல் அல்லது வைத்திருத்தல் அல்லது பொதுப் பணத்தை பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரைகளை அல்லது பொருட்களை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளை நேர்மையாக செய்கின்றமை தொடர்பாக அவர்கள் பிணைகளை வழங்க வேண்டும். ஆனால் பிணைகளை வழங்க வேண்டியிருந்த இரண்டு உத்தியோகத்தர்கள் பிணைகளை வழங்கியிருக்கவில்லை. | குறித்த அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் பிணை வழங்குவதற்கு தேவையான ஆவணங்கள் சில வருடங்களுக்கு முன்னர் உத்தியோகபூர்வமாக செய்யப்பட்ட போதிலும், தற்போதும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து எவ்வித அறிவுறுத்தலும் கிடைத்திருக்கவில்லை.<br>இந்நிலைமை நீதி அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் பிணைகள் வழங்குவது தொடர்பான ஆவணங்களை மீண்டும் அனுப்ப வேண்டியிருப்பதால் அதே விடயத்திற்கு உத்தியோகபூர்வ நேரத்தை ஒதுக்குவது நேரத்தை வீணடிக்கிறதென தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் தொடர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவின் 18 உறுப்பினர்களில் 05 உறுப்பினர்கள் 2023 ஆம் ஆண்டில் எந்தக் கூட்டத்திலும் பங்கேற்றிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் முதலாவது சட்ட ஆணைக்குழுக் கூட்டத்தில் கூட சட்ட ஆணைக்குழுக் கூட்டங்களில் பங்கேற்றிருக்காத உறுப்பினர்கள் இல்லாதமை குறித்து சட்ட ஆணைக்குழுத் தலைவர் கலந்துரையாடினார். சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 05 ஆண்டு காலத்திற்கு தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். தற்போதுள்ள சட்ட ஆணைக்குழு சட்ட | சம்மந்தப்பட்ட உறுப்பினர்களை கூட்டங்களில் பங்கேற்குமாறு தெரிவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பாடுகளின் அடிப்படையில் பங்கேற்காததால் உறுப்புரிமை இரத்து செய்யப்படாததால் அவர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கான வாய்ப்பில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | நிறுவனத்தின் இணையதளம் தற்போது செயற்படவில்லை. மேலும் தரவு முறைமையை பேணும் நோக்கத்திற்காக 2023/2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 28,350 கிரயத்தல் web hosting வசதி புதுப்பிக்கப்பட்டிருந்தது. | இந்தத் திணைக்களத்தின் இணையதளம் தொழில்நுட்பப் பிழையால் செயலிழக்கச் செய்யப்பட்டிருந்ததுடன் தரவு பராமரிப்பு தொடர்பான அதன் மறுசீரமைப்பிற்காக ரூபா 28,350 செலவிடப்பட்டது, மேலும் பிழையை சீர்செய்வதற்கு 2023 பாதீட்டில் இருந்து நிதிகள் பெறப்படாததால் வசதியைப் புதுப்பிக்க வேண்டியிருந்தது. 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் இருந்து பெறப்பட்ட பணத்தின் அடிப்படையில் உரிய திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. | இணையதளம் விரைவில் செயற்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தில் உள்ள பெரும்பாலான உறுதிச்சீட்டுக்களில் பணம் பெறுபவர் கையெழுத்திட்டிருக்கவில்லை. | குறித்த அவதானத்தின் பிரகாரம் செயற்படுமாறு விடய உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | உறுதிச்சீட்டுகளுக்கு பணம் செலுத்தும் போது, பணம் பெறுபவரின் கையொப்பத்தை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டாம் நிலையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 15 ஆக இருந்த போதிலும் 06 உண்மையான ஊழியர் எண்ணிக்கையில் 09 வெற்றிடங்கள் காணப்பட்டது. அதாவது கணக்கு உதவியாளர் பதவி, 01 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி, 06 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் தட்டெழுத்தாளர் பதவி என்பன வெற்றிடமாக இருந்தன. | அவதானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |